ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2460/12 - 2025 ඔක්තෝබර් මස 29 වැනි බදාදා - 2025.10.29
2460/12 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 29 ஆந் திகதி புதன்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளைச் சட்டம்

1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சர், அநுர கருணாதிலக ஆகிய நான், குறித்த சபைக்கு, ஹன்தானவத்த நீர் வழங்கல் திட்டத்தின், 80 கனமீற்றர் நீர் களஞ்சியத் தாங்கி மற்றும் உட்பிரவேசிக்கும் பாதையை நிர்மாணிப்பதற்கு காணித்துண்டுகள் தேவைப்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணித்துண்டின் அசையாச் சொத்தின் உரிமையை சுவீகரித்துக்கொள்வதை இக்கட்டளையினூடாக அனுமதிக்கின்றேன்.

**அநுர கருணாதிலக,**
நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும்
வீடமைப்பு அமைச்சர்.

தொடர்பு இல. : MUDH/WS/LA/02/560
நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சு,
12 ஆவது மாடி,
செத்சிரிபாய கட்டம் 11,
பத்தரமுல்லை.
2025, ஒற்றோபர் 08.


*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

மத்திய மாகாணத்தின், கண்டி மாவட்டத்தில், கண்டி கடவத் சதர மற்றும் கங்கவட்ட கோரளே பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 242, ஹீரஸ்ஸகல கிராம அலுவலர் பிரிவில், ஹீரஸ்ஸகல கிராமத்திலமைந்த, கீழ்க் காணப்படும் எல்லைகளில் அமைந்த சுமார் 10 பேர்ச்சஸ் அளவிலான காணித்துண்டு.

காணியின் எல்லைகள்:

வடக்கு : இந்த காணியின் எஞ்சிய பகுதி;
கிழக்கு : இந்த காணியின் எஞ்சிய பகுதி;
தெற்கு : இந்த காணியின் எஞ்சிய பகுதி;
மேற்கு : மணல் பாதை மற்றும் இந்த காணியின் எஞ்சிய பகுதி.

காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் :

பொது முகாமையாளர்,
மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை,
இலக்கம் 15/ 75,
வொக்ஷொல் வீதி,
கொழும்பு 02.

EOG 10-0259

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது